செ.வெ.எண்.325/2009/செமதொஅ நாள்: 30.09.2009

**தமிழகம் முழுவதும் 7.5 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் பேச்சு.**

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், மாடம்பாக்கம் பேரூராட்சியில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு 356 குடும்பங்களுக்கு ரூ.87 இலட்சம் மதிப்பிலான வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி, விழாப் பேருரையாற்றினார்.

“ மாடம்பாக்கம் பேரூராட்சியில் பல ஆண்டுகாலமாக அரசு புறம்போக்கில் குடியிருந்த குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த பேரூராட்சியிலுள்ள 356 குடும்பங்களுக்கு ரூ.87 கோடி மதிப்பிலான வீட்டுமனைப் பட்டா இலவசமாக வழங்கப்படுகிறது. ஏற்கனவே 678 குடும்பங்களுக்கு ரூ.25 கோடி மதிப்பிலான வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டது. இதுவரை மாடம்பாக்கம் பேரூராட்சியில் 1000 குடும்பங்களுக்கு மேல் ரூ.111.29 கோடி மதிப்பிலான வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் தனியார் மதிப்பு ரூ.250 கோடியாகும். தேர்தலுக்கு முன்பு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழகத்தில் அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருபவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என்று தெரிவித்தார். தற்போது 5 ஆண்டுகள் குடியிருந்தாலே அவர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கலாம் என உத்திரவிட்டு, தமிழகம் முழுவதும் 7.5 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கிய ஒரே தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர்.

மாடம்பாக்கம் பேரூராட்சியில் கடந்த 3 ஆண்டுகளில் ரூ.8 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் நடைபெற்றுள்ளன. தற்போது ரூ.54 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்காவும்,ரூ.13 கோடியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காகவும் ஆக மொத்தம் ரூ.67 கோடி மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதே போன்று தமிழகம் முழுவதும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த கால ஆட்சியில் இது போன்று எந்தவித வளர்ச்சித் திட்டப்பணிகளும் நடைபெறவில்லை.

நகர்புறத்தில் வாழும் மக்களைப் போல கிராம மக்களும் அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற்று வாழ வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட சிறப்பான திட்டம் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் ஆகும். தமிழகத்தில் 12500 கிராம ஊராட்சிகள் உள்ளன. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சிக்கும் தலா ரூ.20 இலட்சம் நிதிஒதுக்கீடு வழங்கப்பட்டு சிமெண்ட் சாலை, சோடியம் ஆவிவிளக்கு, நூலகம், பாதுகாக்கப்பட்ட குடிநீர்வசதி, பூங்கா, மயானம் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகிறது. இதுவரை 8000 ஊராட்சிகளுக்கு தலா ரூ.20 இலட்சம் நிதி வழங்கப்பட்டு அனைத்து கட்டமைப்பு வசதிகளும் செய்யப்பட்டு தன்னிறைவு பெற்றுள்ளன.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 20க்கும் மேற்பட்ட மேம்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. இதே போன்று தமிழகம் முழுவதும் பல்வேறு மேம்பாலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் பல்வேறு தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு பல இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கி தரப்பட்டுள்ளன. கடந்த கால ஆட்சியில் பணி நியமன தடைச்சட்டத்தினால் 3.5 இலட்சம் அரசு காலி பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றப்பிறகு பணி நியமன தடையாணை நீக்கப்பட்டு 3.5 இலட்சம் அரசு காலி பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

இந்த பகுதி மக்கள் கோவில் அடிமனை வாடகை நிர்ணயம் செய்து வழங்கவேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர். கோவில் அடிமனை வாடகை நிர்ணயம் தொடர்பான பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. விரைவில் இப்பகுதி மக்களுக்கு அடிமனை வாடகை நிர்ணயம் செய்து வழங்கப்படும் ” என்று தெரிவித்தார்.

இவ்விழாவில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.ராஜா, மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி ஆகியோர் முன்னிலையுரையாற்றினர்.மும்பை துறைமுக பொறுப்பு குழு உறுப்பினர் திரு.மீ.அ.வைதியலிங்கம், மரபுசாரா எரிசக்தி ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.த.விசுவநாதன், ஒன்றிய பெருந்தலைவர் திரு.எம்.கே.ஏழுமலை, ஒன்றிய துணைப்பெருந்தலைவர் திரு.மு.மனோகரன், மாநில மீனவர் நல வாரிய உறுப்பினர் திரு.த.விஜயபாலன், பேரூராட்சி உறுப்பினர் திரு.எல்.எஸ்.மோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். செங்கல்பட்டு வருவாய் கோட்ட அலுவலர் செல்வி.பத்மஜாதேவி அவர்கள் தலைமையுரையாற்றினார். முன்னதாக விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் மாடம்பாக்கம் பேரூராட்சி மன்றத்தலைவர் திருமதி.மல்லிகா மோகன் வரவேற்றார். நிறைவாக பேரூராட்சி உறுப்பினர் திரு.கோ.தேனுபுரி நன்றி கூறினார். பேரூராட்களின் உதவி இயக்குநர் திரு.சுந்தரம், தாம்பரம் வட்டாட்சியர் திரு.கோவிந்தராஜன், மாடம்பாக்கம் பேரூராட்சி துணைத்தலைவர் திரு.ஆ.நடராஜன், நத்தம் நிலவரி திட்ட ஆய்வாளர்கள் திரு.ச.பாலகிருஷ்ணன், எம்.கபிலன், செயல் அலுவலர் திரு.குணசேகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.